(B)

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023

Register No. [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

**TA2A**

5412–22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three – year Regular Course)

First Year – Second Semester

LAW OF CONTRACTS – II

Time : $2\frac{1}{2}$ hours — Maximum 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the rights of lien and stoppage in transit of goods of unpaid seller.

   விலைபெறா விற்பனையாளரின் பற்று உரிமை மற்றும் சரக்கு செல்லுகையில் நிறுத்தம் செய்யும் உரிமை ஆகியவற்றை விளக்குக.

2. Who is consumer? Define the locus standi of consumer and describe the procedure to file complaint in District Consumer forum.

   நுகர்வோர் என்பவர் யார்? நுகர்வோரின் வழக்குரையுரிமையை வரையறுத்து, மாவட்ட நுகர்வோர் மன்றத்தில் புகாரளிக்கும் நடைமுறையை விளக்கவும்.

3. Enumerate the different modes of dissolution of a partnership firm and explain the grounds of dissolution by the court.

   கூட்டாண்மை நிறுமம் கலைக்கப்படும் பல்வேறு முறைகளைக் குறிப்பிட்டு நீதிமன்றத்தால் ஏற்படும் நிறுமக்கலைப்பின் காரணிகளை விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the Doctrine of Relating Back with respect to ratification under the Law of Agency.

   முகவரிய சட்டத்தின் கீழ் பின்னேற்பு இசைவு குறித்த மீண்டும் தொடர்புபடுத்தும் கோட்பாடு பற்றி விளக்குக.

5. Define and distinguish the rights and liabilities of Bailor under gratuitous bailment and bailment for hire.

மதிப்புறு ஒப்படைவு மற்றும் வாடகை ஒப்படைவின் கீழ் ஒப்படைவு தருநரின் உரிமைகள் மற்றும் கடமைகளை வேறுபடுத்தி வரையறுக்கவும்.

6. "Satisfaction of the debt extinguishes the pawn". Explain the rights and duties of pledgor and pledgee in the satisfaction of debt.

"கடன் தொகையை செலுத்தும் போது அடகு முடிவிற்கு வரும்" - கடன் தொகை செலுத்தப்படுதலில் அடகு தருநர் மற்றும் அடகுபெறுநரின் உரிமைகள் மற்றும் கடமைகளை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறுகுறிப்புகள் வரைக.

(a) Minor's option on attaining majority

உரிய வயதடைந்த பின் இளவரின் தேர்வு

(b) Co-surety

இணை பிணையாளர்

(c) State Consumer Protection Council

மாநில நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில்

(d) Mercantile Agent

வணிக முகவர்

(e) Gajanan v. Moreshwar (AIR 1942 Bom 302)

கஜானன் எதிர் மொரேஷ்வர் (AIR 1942 Bom 302)

(f) C.I.F. Contract (Cost, Insurance and Freight Contract)

விலை, காப்பீடு மற்றும் சுங்கவரி ஒப்பந்தம்

(g) Mixture of goods by bailee

ஒப்படைவு பெறுநரால் ஏற்படும் பொருட்களின் கலவை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' purchased a golden bangle from 'B' by exercising fraud and pledged it with 'C' before the contract was rescinded by 'B'. Is the pledge valid? Analyse with relevant case law.

'அ' என்பவர் ஒரு தங்க வளையலை 'ஆ' என்பவரிடமிருந்து மோசடி செய்து வாங்கினார். பிறகு அந்த ஒப்பந்தத்தை 'ஆ' தவிர்ப்பதற்கு முன் 'அ' அந்த வளையலை, "இ"யிடம் அடகு வைத்தார். இந்த அடகு செல்லத்தகுந்ததா? தொடர்புடைய வழக்கோடு ஆராய்க.

9. A car was delivered on 'Sale or return' within 8 days to 'B' by 'C'. The car got repaired within 5 days. Analyse who will bear the repair charges? B or C?

எட்டு நாட்களுக்குள், 'விற்பனை அல்லது திருப்பி தருதல்' என்ற அடிப்படையில் 'ஆ'விடம், 'இ' என்பவரால் மோட்டார் வண்டி ஒப்படைக்கப்பட்டது. ஐந்து நாட்களுக்குள் மோட்டார் வண்டி பழுதானது. மோட்டார் வண்டி பழுது செலவுகளுக்கு யார் பொறுப்பேற்க வேண்டும்? 'ஆ' அல்லது 'இ'? ஆராய்க.

10. 'A' guarantees payment to 'B' a tea-dealer for Rs.100/- for any tea he may from time to time supply to 'C'. 'B' supplies tea to 'C' to the value of Rs.200/- and 'C' does not pay for it. Discuss the liability of 'A'.

'ஆ' என்ற தேநீர் விற்பனையாளர் 'இ' என்பவருக்கு அவ்வப்போது வழங்கும் ரூ.100/- வரையிலான தேநீருக்கு 'அ' என்பவர் பொறுப்புறுதி வழங்கினார். ஆனால் 'ஆ' ரூ.200/- வரை 'இ'க்கு தேநீர் வழங்கினார். 'இ' அதற்கு பணம் செலுத்தவில்லை. 'அ' வின் கடப்பாட்டை விளக்கவும்.

---

(2)

GOVERNMENT LAW COLLEGE, T...
15 MAY 20..
LIBR..

Register No. | | | | | | | | |

**TA2B**

**5413-22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three-year – Regular Course)

First Year – Second Semester

PROPERTY LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Transfer of Property Act applies to transfer inter vivos. But transfer for the benefit of an unborn person is an exception to this rule" – Explain.

   "சொத்துரிமை மாற்றுச் சட்டம் உயிருள்ள நபர்களுக்கிடையேயான சொத்துரிமை மாற்றம் பற்றிக் கூறுகிறது. ஆனால் பிறவாத நபருக்குச் செய்யப்படும் உரிமை மாற்றம் இதற்கு ஒரு விதிவிலக்காகும்" – விளக்குக.

2. Discuss the essentials of lease and explain the rights and liabilities of lessor and lessee.

   குத்தகை என்பதன் முக்கியக் கூறுகளை விவாதிக்கவும். குத்தகைக்குக் கொடுத்தவர் மற்றும் குத்தகைதாரரின் உரிமைகளையும், கடமைகளையும் விளக்குக.

3. Discuss the various modes of acquisition of easements.

   பல்வேறு வகையான வசதியுரிமைகளைப் பெறும் வழிமுறைகளைப் பற்றி விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State the rights and liabilities of the seller and buyer before and after sale – Give it shortly.

   விற்பவர் மற்றும் வாங்குபவர் ஆகியோரின் விற்பனைக்கு முன் மற்றும் விற்பனைக்கு பின்னதான உரிமைகளையும் கடமைகளையும் கூறுக – சுருக்கமாக விடையளிக்கவும்.

5. "Once a mortgage, always a mortgage and nothing but a mortgage" is based on an equity principle. Explain it tracing its history.

"ஒரு முறை அடைமானமென்றால் எப்போதுமே அடைமானம்தான்; அடைமானத்தைத் தவிர வேறெதுவுமில்லை" என்பது ஒரு தகைமை கொள்கையின் அடிப்படையில் அமைந்ததாகும். அதன் வரலாற்றை விளக்குக.

6. Write about the importance of acceptance of a gift, onerous gift and deathbed gift.

ஒரு கொடையை ஏற்றுக் கொள்வதன் முக்கியத்துவம், சுமையுடன் கூடிய கொடை, மற்றும் மரணத்தருவாய்க் கொடை ஆகியவை பற்றி எழுதுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Spes successionis

இறங்குரிமைக்கான வாய்ப்பு

(b) Rule against perpetuity

வரையிலா நிலைக்கு எதிரான விதி

(c) Bellamy – vs – Sabine

பெல்லமி – எதிர் – சபைன்

(d) Caveat Emptor

வாங்குபவனே விழித்திரு

(e) Kinds of Lease

குத்தகையின் வகைகள்

(f) Mortgage by conditional sale

விற்பனை நிபந்தனையுடன் கூடிய அடைமானம்

(g) Negative Easements

எதிர்மறை வசதியுரிமைகள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' and 'B', two brothers effected a partition of their joint family property and agreed that they should not sell the properties allotted to them at the partition to persons outside the family. Is it valid? Decide.

'அ' மற்றும் 'ஆ', இரு சகோதரர்கள் தங்களுடைய கூட்டுக் குடும்பச் சொத்தைப் பாகப்பிரிவினை செய்கையில் அச்சொத்துக்களை குடும்பத்திற்கு வெளியே வேறு யாருக்கும் விற்பனை செய்தல் கூடாது என ஒப்புக்கொண்டனர். இது செல்லுமா? தீர்மானிக்கவும்.

9. 'A' made a gift of her house to 'B', 'C' and 'D'. 'B' and 'C' accepted the gift but 'D' refuses. Discuss the effect of the gift.

'அ' என்பவர் தன்னுடைய வீட்டை 'ஆ', 'இ', 'ஈ' ஆகியோருக்கு தானமாக கொடுக்கிறார். 'ஆ', 'இ' ஆகியோர் அக்கொடையை ஏற்றுக் கொள்கின்றனர். 'ஈ' ஏற்றுக் கொள்ள மறுக்கிறார். இதன் விளைவு என்ன?

10. Ram dedicates to the public the right to use the surface of certain land as pathway. Is this a valid easement?

ராம் தனது சொத்தில் ஒரு பகுதியை பொதுமக்கள் நடைபாதையாக உபயோகிக்கும் வகையில் கொடையளிக்கிறார். இது செல்லத்தக்க வசதியுரிமையா?

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAR
LIBRARY

Register No.

**TA2C**

**5414–22**

(For the candidates admitted from 2017 - 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three – year Regular Course)

First Year – Second Semester

CONSTITUTIONAL LAW - I

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the scope of freedom of speech and expression with its limitations in India.

   இந்தியாவில் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தின் அளாவுகையை அதன் மீதான கட்டுப்பாடுகளுடன் விளக்குக.

2. "Fundamental Freedom of Religion is not absolute". Elucidate.

   "மதச்சுதந்திர அடிப்படை உரிமையானது முழுமையானது அல்ல". எடுத்துரைக்க.

3. Explain the ways of resolving the conflict between fundamental rights and Directive Principles of State Policy.

   அடிப்படை உரிமைகளுக்கும் மற்றும் அரசின் வழிகாட்டும் நெறிமுறைகளுக்கிடையேயான முரண்பாட்டினை தீர்ப்பதற்கான வழிகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டனுக்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Evaluate "Double Jeopardy" with decided case laws.

   "இரட்டை இடரை" தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் மதிப்பிடுக.

5. **The Indian Constitution is neither federal nor unitary but Quasi-federal. Explain.**

இந்திய அரசமைப்புச் சட்டம் ஒரு கூட்டாட்சியுமில்லை ஒற்றையாட்சியுமில்லை ஆனால் கூட்டாட்சி போல்வு. விவரிக்கவும்.

6. Explain the constitutional position of equality of opportunity in public employment in India.

இந்தியாவில் பொது வேலை வாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கும் அரசமைப்புச் சட்ட நிலையினை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்தனுக்கு சிறுகுறிப்புகள் வரைக.

(a) Preamble

முகப்புரை

(b) Right against Exploitation

சுரண்டலுக்கு எதிரான உரிமை

(c) Self-incrimination

தன் குற்றமேற்றல்

(d) Preventive Detention Laws

தடுப்புக் காவல் சட்டங்கள்

(e) Doctrine of Eclipse

மறைதல் கோட்பாடு

(f) Dual citizenship

இரட்டை குடியுரிமை

(g) Paramanand Katara *v.* Union of India (1995) 3 SCC 248

பரமானந்த் கதாரா எதிர். இந்திய யூனியன் (1995) 3 SCC 248

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டனுக்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr. Ratsakan, an injured person in an accident was taken to the charitable hospital for first aid. The doctors refused to provide assistance without procedural formalities being completed and the injured person died. Decide.

   திரு. இரட்சகன் விபத்தில் காயமடைந்து ஒரு தொண்டு நல மருத்துவமனைக்கு முதலுதவிக்காக எடுத்துச் செல்லப்பட்டார். சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படாததால் முதலுதவி அளிக்க மருத்துவர்கள் மறுத்து விட்டதால் அவர் இறந்து விடுகிறார். தீர்மானிக்கவும்.

9. A state legislature enacted a law providing 40% reservation for women in public employment. It was challenged before the court on the ground of violating equal opportunity. Is it sustainable? Decide.

   ஒரு மாநில அரசானது பொது நிறுவனங்களின் வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கென 40 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி சட்டமொன்றை இயற்றியது. இச்சட்டமானது சமமான வாய்ப்புக்கு எதிரானது என்று கூறி இதன் செல்லுந்தன்மை குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இது நிலைக்கத்தக்கதா? தீர்மானிக்கவும்.

10. More than 2000 children below the age of 14 years were employed in M/S. Rainbow Colours at Thiruppur. Future Children, an NGO, filed a Public Interest Litigation before the court against this. Is the PIL maintainable? Decide.

    திருப்பூரில் உள்ள இரெயின்போ கலர்ஸ் தொழிற்சாலையில் 2000க்கு மேற்பட்ட 14 வயதிற்கு குறைவான குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இதற்கு எதிராக 'ஃப்யூசர் சில்ட்ரென்' என்னும் அரசு சார்பற்ற அமைப்பு நீதிமன்றத்தில் பொது நல வழக்கு ஒன்று தொடர்ந்தது. இந்த பொது நல வழக்கு செல்லத்தக்கதா? தீர்மானிக்கவும்.

———

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 202
LIBRARY

Register No.

**TA2D**

**5415–22**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three-year Regular Course)

First Year – Second Semester

FAMILY LAW – II

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the salient features of the Hindu Mithakshara Coparcenary system.

   இந்து மிதாக்சர பங்குரிமை முறையின் சிறப்பியல்புகளை விளக்குக.

2. What is Hiba? What are the essentials of Hiba? When Hiba may be revoked?

   ஹிபா என்றால் என்ன? ஹிபாவின் ஆக்கக் கூறுகள் யாவை? எப்போது ஹிபா மறுதலிக்கப்படலாம்?

3. Discuss the rules of succession applicable to female intestate under Christian law of inheritance.

   கிறிஸ்துவ இறங்குரிமை சட்டத்தின் கீழ் பெண் உயில் எழுதாமல் இறந்தால் பொருந்தக் கூடிய இறங்குரிமை விதிகளை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Who are the legal heirs of a female Hindu under the Hindu Succession Act, 1956?

   1956-ம் ஆண்டு இந்து இறங்குரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு இந்து பெண்ணின் சட்டபூர்வமான வாரிசுகள் யாவர்?

5. What are Avyavaharikha debts? On what grounds can such debts be challenged and by whom?

அவ்யவஹாரிகக் கடன்கள் என்றால் என்ன? என்ன காரணங்களால் அத்தகைய கடன்கள் யாரால் எதிர்க்கப்படலாம்?

6. Explain how succession certificate is to be obtained.

வாரிசுச் சான்றிதழ் பெறும் முறையினை விவரிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Privileged will

சலுகையற்ற உயில்

(b) Doctrine of Representation

பிரதிநிதித்துவக் கோட்பாடு

(c) Onerous bequest

சுமையுடன் கூடிய உயில்வழி கொடையளிப்பு

(d) Wakf alal – Aulad

வக்ப் அலால் – அவுலத்

(e) Tarwad

தார்வாடு

(f) Doctrine of Cypres

இயன்றளவு கோட்பாடு

(g) Doctrine of Radd

மீட்டளிப்பு கோட்பாடு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Shia Muslim female dies leaving her father, mother and husband. Distribute her property.

ஷியா வகுப்பைச் சார்ந்த முகமதிய பெண் ஒருவர் அவளது தந்தை, தாய் மற்றும் கணவனை விட்டுவிட்டு இறக்கிறார். அவளது சொத்தினை பங்கிடுக.

9. A Christian female dies leaving her two children of predeceased son and three children of predeceased daughter. Distribute her property.

கிறிஸ்துவ பெண்மணி ஒருவர் தனது இறந்துவிட்ட மகனின் இரண்டு குழந்தைகள் மற்றும் இறந்துவிட்ட மகளின் மூன்று குழந்தைகளை விட்டுவிட்டு இறக்கிறார். அவளது சொத்தினை பங்கிடுக.

10. A Hindu male dies leaving behind his mother, father, brother and the uterine sister. Distribute the estate.

ஒரு இந்து ஆண் தன் தாய், தந்தை, சகோதரன் மற்றும் தாய்வழி சகோதரி ஆகியோரை விட்டுவிட்டு இறந்து விடுகிறான். சொத்தை பங்கிடுக.

---